24th March 1961]

Lands to Agriculturists (Tiruthuraippoondi taluk)

* 1055 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுகாவில் எந்தெந்தக் கிராமத்தில் நில மற்ற விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன ?

(இ) இந்த நிலங்களை அவர்களுக்கு அளிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) The figures are not available with the Government. The Government consider that the time and labour involved in collecting the figures will not be commensurate with the results.

SRI A. VEDARATHNAM : இதன் முன், மகாணத்திலுள்ள, ஜில்லாக் களில் உள்ள தரிசு நிலங்கள் பற்றி இந்த சபையில் கணக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு தாலுகாவில் உள்ளது பற்றி மட்டுந்தான் கேட்கப் பட்டிருக்கிறது. தாலுகா கணக்கு கூட அரசாங்கத்தாரிடம் இல்லையா, தயாரிக்கமுடியாத அளவு அவ்வளவு அதிகமிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The break-up of the figures that the hon. Member wants is not just now available with me. But, I may tell him that on 1—9—1960, 29,375 acres were available for assignment and from 1—9—1960 to 31—1—1961, 1,808 acres were assigned.

SRI A. VEDARATHNAM : இன்னும் பாக்கியிருக்கிற நிலங்களை நில மில்லாத விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு என்ன ஏற்பாடு நடை பெறுகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்காக தனி சிப்பந்திகள் ஏற்படுத்தி 2 ஸ்பெஷல் டெப்டி தாசில்தார், 4 ஆர். ஐ. திருத்துறைப்பூண்டி தாலுகாவிலும், மற்ற இடத்தில் ஒரு டெப்டி தாசில்தார், 2 ஆர். ஐ. ஏற்படுத்தி நிலம் வழங்க வேலை செய்யப்பட்டு வருகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குகிற முறையில் மானிலம் பூராவிலுமே இந்த நிலமில்லாத வர்களுக்கு புறம்போக்கு நிலங்களை, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் இவைகளின் தேவைக்கு அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களை நிலமற்றவர் களுக்கு கொடுப்பதன் மூலம் அங்கு கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய சர்க்கார் உதவி அளித்தால் உணவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவதோடு வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். அதை சர்க்கார் எல்லாயிடங் களிலும் நிரந்தரமாக கொண்டுவருவதற்கு கொஞ்சம் சீக்கிரம் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI. M. A. MANICKAVELU : தனிப்பட்ட முறையில் நிலம் வழங்கப்படுகிறது. கூட்டுறவு முறையிலும் நிலம் சாகுபடி செய்ய திட்ட மிருக்கிறது. எல்லாம் ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்பதில்லை. எங் கெங்கு எப்படி எப்படி சௌகரியமோ அப்படி செய்யப்படும்.

SRI A. VEDARATHNAM : நிலம் அனைத்தும் இலவசமாக வழங்கப் படுகிறதா ? அதற்கு கிரயம் வசூலிக்கப் படுகிறதா ? சிலவிடங்களில் கிரயம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அதன் உண்மைநிலை என்ன ?

THE HON SRI M. A. MANICKAVELU : இரண்டு விதமிருக்கிறது. வால்யூபிள் அன்ட் நான்-வால்யூபிள் லாண்ட்ஸ் என்று. நீர்ப்பாசன வசதியுள்ளது வால்யூபிள் லாண்ட்ஸ். அதற்குத்தான் ஏதாவது பணம். ஆனால் அனேகமாக நான்-வால்யூபிள் லாண்ட்ஸ்தான் கொடுக்கப்படுகின்றன. அதற்கு பணமில்லை.

[24th March 1961

SRI K. B. S. MANI : சர்க்காரால் கொடுக்கப்படுகிற நிலங்களை சிலவிடங்களில் பக்கத்து நிலத்தின் சொந்தக்காரர்களான மிராசுதார்கள் அவைகளை மாற்றுப் பெயர்களில் தாங்களே ஆக்ரமித்துத் தங்களுக்கு சாதகமாக்கி தங்கள் நிலத்தோடு சேர்த்துக்கொண்டு வருவது சர்க்காருக்கு தெரியுமா ? அப்படித் தெரிந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THE HON SRI M. A. MANICKAVELU : எப்படி எப்படி, எந்தெந்த இடங்களில் இப்படி சம்பவம் நடக்கிறது என்று தெரிந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : நிலமற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலத்தில் அவர்கள் பயிரிடுகிறார்களா, இல்லை சும்மா போட்டிருக்கிறார்களா ? சும்மா போட்டிருந்தால் அவர்கள்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசம் ?

THE HON SRI M. A. MANICKAVELU : நிலம் கொடுக்கிற விதி பிரகாரம், மூன்று வருடங்களுக்கு உள்ளாக சாகுபடி செய்யவேண்டும், இல்லையென்றால் நிலத்தைத் திருப்பி எடுத்துக் கொள்வது என்பது விதி.

SRI V. K. KOTHANDARAMAN : வால்யூபிள், நான்-வால்யூபிள் என்ற ஒரு நிர்ணயிப்பு இப்பொழுதேயிருக்கிறதா ? அல்லது அந்தந்த நிலத்தை வால்யூபிள் என்று சொல்லக்கூடிய நிலையில் அந்தந்த நிலத்திற்கு தகுந்தாற்போல் நிர்ணயிக்கப்படுகிறதா ?

THE HON SRI M. A. MANICKAVELU : இப்பொழுதே இருக்கிறது. நீர்ப்பாசன வசதி இல்லையென்றால், இல்லை.

Electric lights (Utharakosa Mangai)

* 1056 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any request was made by the panchayat board of " Utharakosa Mangai " of Ramanathapuram district for the provision of electric lights in the streets?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

SRI K. VINAYAKAM : May I know the stage at which the proposition stands and when the Panchayat would get street lights?

THE HON. SRI V. RAMAIAH : The work will be taken up during the course of the next year.

SRI K. VINAYAKAM : What was the estimated amount that was demanded from this Panchayat Board and did the Panchayat tender that amount?

THE HON. SRI V. RAMAIAH : A scheme has been prepared and it is a feasible scheme and that is why I said that the work will be taken up during the next year.

Land ceiling (survey of lands)

* 1057 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலத்திற்கு உச்சவரம்பு கட்டிய பிறகு எவ்வளவு நிலம் உபரியாகக் கிடைக்குமென்பதை சர்வே செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?